**நீர்கொழும்பு மாநகர சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நீர்கொழும்பு மாநகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) 219 ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நீர்கொழும்பு மாநகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் விரிவான முகாமைத்துவ அறிக்கையில் பின்வரும் இலக்கங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.2.2(அ), 1.2.1(ஆ), 1.2.1(ஈ), 1.2.1(ஐ),1.2.2(அ), 1.2.2(இ), 1.2.3, 1.2.5(ஆ), (இ), 1.2.6(ஆ)(i), 2.3.3, 3.1(அ), 3.5 மற்றும 3.6

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்பு இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலக்கம் 18.7 இன் பிரகாரம் சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் உள்ளூராட்சி ஆணையாளரின் 2021 பெப்ரவரி 22 ஆந் திகதிய LGD/10A/4/ந.கி/2019 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் மீளாய்வாண்டில் காணி மற்றும் கட்டிடங்கள் தனித்தனியாக | சொத்துக்களை இனங்காணுதல் நகர பொறியியலாளரின் அறிக்கை கிடைத்ததன் பின்னர் மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இனங்காணப்படாதிருந்ததுடன் கணனி மற்றும் கணனி மென்பொருள் இயந்திரக் கணக்கிலிருந்து வேறுபடுத்தி இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | இலக்கம் 9.9 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 10 இன் கீழ் மூலதன செலவினங்களின் மானியப் பெறுவனவுகளின் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள், மிகையில் இனங்காணப்பட்ட மானியமாக கணித்து சேமிப்பு தேறிய சொத்துக்கள், உரிமை மூலதனத்தில் கீழான மிகையில் இனங்காணப்படாமல் மானியத்தின் கீழ் பதியப்பட வேண்டியிருந்ததுடன், பெறுமானத்தேய்வு கணிப்பீடு செய்யப்பட்ட அடிப்படை விரிவான வருமானக் கூற்றில் நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் குறிப்பு இலக்கம் 05 இன் கீழ் வருமான செலவினமாக காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டில் கிடைத்ததாக கணக்கீட்டு கொள்கையின் கீழ் வெளிப்படுத்தப்பட்ட ரூபா 73,772,323 தொகையான மூலதன நிதியுதவி பணம் அவ்வாறு கணக்கேடு செய்யப்பட்டிருக்கவில்லை. | குறிப்பு இலக்கம் 10 இன் கீழ் பதியப்படாதிருந்த கிடைத்த வருமானங்கள் செலவினக் கணக்கில் சீராக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | - மேற்படி - |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீபுற காணியில் வள மீள்சுழற்சி நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக ஜப்பானின் Global Environmental Strategies நிறுவனத்தால் 03 கட்டங்களின் கீழ் அனுப்பப்பட வேண்டிய நிதிஏற்பாடுகளில் ஒரு கட்டத்தின் நிதிஏற்பாடான ரூபா 3,679,900 தொகை 2020 நவம்பர் 02 ஆந் திகதி கிடைத்திருந்த போதும், அது மீளாய்வாண்டில் கிடைத்த மூலதன செலவின மானியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல் நானாவித வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாமையால் வைப்புக் கணக்கில் பதியப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நூலக செயற்திட்டத்தின் இழப்பீட்டு கொடுப்பனவிற்காக பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த தொகையிலிருந்து 2020 செப்தெம்பர் 07 ஆந் திகதி கிடைத்த ரூபா 6,000,000 மிகுதி தொகை வருமானமாக கணக்கீடு செய்யப்படாமல் நானாவித வைப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் வருமானத்திற்கு எடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | - மேற்படி - |
| (இ) | விரிவான வருமானக் கூற்றில் குறிப்பு இலக்கம் 9 இன் மூலம் ரூபா 23,311,429 நிதி கிரயமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 19,477,308 தொகையான கடன் தவணைப் பணமும் அதில் உள்ளடங்கியிருந்தமையால் அப்பெறுமதியால் செலவினங்கள் அதிகரித்தும் மிகை குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | குறிப்பு இலக்கம் 09 இன் பதியப்பட்டமை தவறாக இருந்தது என அறியத்தருகின்றோம். | - மேற்படி - |
| (ஈ) | கடன் கொடுத்தோருக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 6,764,007 தொகை கடன்பட்டோராக கணக்கீடு செய்யப்படாமல் மொத்த தொகையும் நானாவித கடன்கொடுத்தோர் மீதியில் குறைக்கப்பட்டு காண்பிக்கப்பட்டமையால் அப்பெறுமதியால் கடன்கொடுத்தோர் மீதி குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | தீர்த்து வைக்கப்பட்ட பின் தகவல்கள் கணக்காய்விற்கு அறிக்கையிடப்படும் என அறியத்தருகின்றோம். | - மேற்படி - |
| (உ) | மாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்களிலிருந்து பெற வேண்டியதாக ரூபா 273,536,362 தொகை சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருப்பது செலுத்த வேண்டியதாக குறிப்பிட்டு 03 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகையான ரூபா 283,450 தொகை குறைக்கப்பட்டதன் பின்னராக இருந்தமையால் அப்பெறுமதியால் கிடைக்க வேண்டிய மீதி குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 இன் கணக்குகளில் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். | - மேற்படி - |
| (ஊ) | விரிவான வருமான கூற்றில் வருமானத்தின் குறிப்பு இலக்கம் 04 இல் மீண்டெழும் செலவினத்திற்காக அரசாங்கத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட மாற்றல்கள் ரூபா 356,439,296 ஆக காண்பிக்கப்பட்ட போதிலும் அதில் வெளிவாரி மூலதன மானியம் ரூபா 36,881,243 | எதிர்காலத்தில் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | தொகை உள்ளடக்கப்பட்டமையால் அப்பெறுமதியால் வருமானம் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (எ) | 02 ஊழியர் பிணை வைப்புக்களின் பெறுமதியான ரூபா 60,000 மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அது ஊழியர் முதலீகளிலிருந்து அகற்றப்படாதிருந்தமையால் அப்பெறுமதியால் பிணை முதலீடு அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 இன் கணக்குகளில் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். | - மேற்படி - |
| (ஏ) | மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் பயன்படுத்தப்படுகின்ற அலுவலகத்திற்காக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நிலுவை வாடகையான ரூபா 909,000 கிடைக்க வேண்டியதாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | குறிப்பாக இனங்காண்பதற்கு முடியாதிருந்தமையால் கணக்கீடு செய்யப்படவில்லை என அறியத்தருகின்றோம். | - மேற்படி - |
| (ஐ) | மீளாய்வாண்டில் நிதிஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டில் கிடைத்திருந்த சப்ரிகமக் மக்கள் பங்கேற்பு மற்றும் கிராமப்புற உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் 29 இற்காக ரூபா 23,910,885 நிதிஏற்பாட்டு தொகை பெறவேண்டியதாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு முதல் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | - மேற்படி - |
| (ஒ) | சப்ரிகமக் மக்கள் பங்கேற்பு மற்றும் கிராமப்புற உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் 26 இற்காக ஒப்பந்தகாரர்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டு மீளாய்வாண்டில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட 2021 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 25,154,401 தொகை கடன் கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு முதல் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | - மேற்படி - |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 15 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற பெறுமதிகளுக்கும் நேரொத்த | 2021 ஆம் ஆண்டில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை |

| | | |
|---|---|---|
| அறிக்கைகளில் காணப்படுகின்ற பெறுமதிகளுக்கும் இடையே ரூபா 183,390,158 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 431,348,282 கூட்டுத்தொகையான 06 கணக்கு விடயங்களுக்குரிய விரிவான பட்டோலை மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த / ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மிகை ரூபா 12,330,794 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 181,543,820 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 170,628,000 நிலுவை ஆதனவரி மீதியொன்று காணப்பட்டது. | கொரோனா தொற்று நோய் காணப்பட்டமையின் காரணமாக இந்த நிலுவை ஏற்படுவதற்கு காரணமாக இருந்ததென அறியத்தருகின்றோம். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

#### 2.2.2 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடைத்தொகுதியில் 12 கடைகளில் ரூபா 2,082,026 மற்றும் புதிய பேரூந்து தரிப்பிட நிலைய கடைத்தொகுதியில் 06 கடைகளில் | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது என | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| ரூபா 5,568,772 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 7,650,798 தொகை 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கேள்வி மற்றும் வாடகை நிலுவையாக அறவிடுவதற்கு காணப்பட்ட போதிலும் அந்த கடைகளை முத்திரை வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் தவிர அந்த பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறியத்தருகின்றோம். | எடுத்தல் வேண்டும். |

**2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1990 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற கொச்சிக்கடை உப அலுவலகத்தில் ரூபா 2,600,725 தொகையான அனுமதிப்பத்திரக் கட்டண நிலுவை தொடர்பாக சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுத்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 15,000,000 தொகையின் கீழ் சபையின் அலுவலக நடவடிக்கைகளை கணனிமயப்படுத்தும் கட்டம் II இற்காக கூறுவிலைகள் கோரப்பட்டிருந்ததுடன் 2020 பெப்ரவரி 14 ஆந் திகதிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் பின்பற்றப்பட்டிருந்த திட்டமுறைமை, அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் | ஆவணங்களில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளின் காரணமாக மீண்டும் கூறுவிலை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

கோவையின் 1.2.1(இ) பிரிவில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்கு முரணாக இருந்தமையால் மீண்டும் கூறுவிலை கோரல் ஆவணங்களை தயாரிப்பதற்கும், கூறுவிலை கோருவதற்கும் பரிந்துரை செய்யப்பட்டமையால் அது வரையிலும் முதலாவது கேள்விக்காக 2019 நவம்பர் 06 ஆந் திகதி செலவிடப்பட்ட ரூபா 198,645 தொகை சிக்கனமற்ற செலவினமாக இருந்தது.

## 3.2 எதிர்பார்க்கப்பட்ட பணிகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ‘‘நீர்கொழும்பு நகரத்தை டிஜிட்டல் நகரமாக்குதல்’’ செயற்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட பணிகள் நிறைவேற்றாமை மற்றும் செயற்திட்டத்திற்காக செலவினத் தலைப்பை விஞ்சி செலவினங்கள் மேற்கொண்டதன் காரணமாக கம்பஹா உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் செயற்திட்டத்தை மீண்டும் பரிந்துரை செய்தல் கைவிடப்பட்டிருந்த போது 2019 ஒக்தோபர் 10 முதல் 2021 ஏப்ரல் 18 ஆந் திகதி வரை 03 சந்தர்ப்பங்களின் போது செயற்திட்டக் காலம் 06 மாதங்கள் வீதம் நீடிப்பதற்கு சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 39 கிராம சேவகர் பிரிவுகளில் 11 பிரிவுகள் மாத்திரம் வரைபட திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்திற்காக 7-20 ஊழியர்களுக்கிடையிலான எண்ணிக்கைக்கு சம்பளமாக 2019 ஆம் ஆண்டில் ரூபா 1,922,172 தொகையும், 2020 ஆம் ஆண்டில் ரூபா 1,615,152 தொகையும், ஊழியர் சேமலாப நிதியத்திற்காக சபையின் பங்களிப்பாக 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்காக முறையே ரூபா 250,718 மற்றும் ரூபா 213,031 தொகையும் ஆக செலவிடப்பட்டிருந்ததுடன் இதற்காக பாதீட்டின் மூலம் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட | தற்போது வரையில் 11 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வீதிகள் மற்றும் வடிகாண் வரைபடமாக்குதல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் செயலாற்றலை அடைதல் வேண்டும். |

தொகை முறையே ரூபா 890,000 மற்றும் 700,000 ஆகும். இந்த விடயங்களை கவனத்தில் கொள்ளும் போது செலவிடப்பட்ட செலவினங்களுக்கு ஒப்பாக செயற்திட்டத்தின் செயலாற்றல் போதியளவான மட்டத்தில் காணப்படவில்லை.

### 3.3 நோக்கங்கள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| முறையான விளக்கு தூண்கள் கணிப்பிடப்பட்டு நகரை ஒளியூட்டும் செயற்திட்டம் 2018 சனவரி 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்தில் பூர்த்தி செய்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டு உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அங்கீகாரம் கிடைத்திருக்காத போது அங்கீகாரமின்றி 12 ஊழியர்களுக்காக ரூபா 711,990 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட தூண்களின் எண்ணிக்கை 18300 ஆக இருந்ததுடன் அந்த அறிக்கையின் பிரகாரம் முதல் 06 மாத காலத்தில் தூண்களுக்கு இலக்கமிடலை பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தது. அதன் பிரகாரம் இந்த செயற்திட்டத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் சரியான பிரகாரம் மேற்பார்வை செய்யப்படாமையினால் இது பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் 2020 பெப்ரவரி 15 ஆந் திகதி வரையில் 39 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 08 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 7271 தூண்கள் மாத்திரம் இலக்கமிடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் ‘‘நீர்கொழும்பு நகரத்தை டிஜிட்டல் நகரமாக்குதல் செயற்திட்டம்’’ இன் கீழும் உள்ளடக்கப்பட்டமையால் 02 செயற்திட்டங்கள் தேவையற்று இருந்ததாக உள்ளூராட்சி ஆணையாளரினாலும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. | புதிய பணியாக இருந்தமையால் அனுபவம் பெறுவகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்ட மையால் முதல் 06 மாத காலத்தில் உடையார்தோப்பு கிராம உத்தியோகத்தர் பிரிவை மாத்திரம் டிஜிட்டல் மயப்படுத்துவதற்கு முடியுமாக இருந்ததை அறியத்தருகின்றோம். | செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் செயலாற்றல்களை அடைதல் வேண்டும். |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) யப்பானின் Global Environmental Strategies நிறுவனத்தால் 03 கட்டங்களில் உள்ளடக்கிய அமெரிக்க டொலர் 43,300 நிதியுதவியின் கீழ் மீபுற காணியில் வள மீள்சுழற்சி நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக 2020 திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி ரூபா 9,901,223 தொகையில் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் அதன் ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் நகரவாசிகளின் ஆர்ப்பாட்டத்தின் காரணமாக 2021 பெப்ரவரி 05 ஆந் திகதி அந்த நிர்மாணங்களை அந்த இடத்தில் மேற்கொள்ள முடியாதிருந்ததாக அறிக்கையிடப்பட்டிருந்தது. அதனால் அந்த நிர்மாணம் கொச்சிக்கடை பழைய அறுவைக்கூடம் அமைந்துள்ள காணியொன்று தெரிவு செய்யப்பட்டு மேற்கூறப்பட்ட ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் மீண்டும் உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை. 03 கட்டங்களில் பெற வேண்டிய நிதி உதவியில் ரூபா 3,679,900 தொகை 2020 நவம்பர் 02 ஆந் திகதி கிடைத்திருந்ததுடன் நிலத்தை மாற்றியமை அறிவிக்கப்படாமல் அத்திவார வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு மிகுதி வேலைகள் ஆரம்ப காணியில் மேற்கொள்ளப் படுகின்றதாக குறிப்பிடப்பட்டு இரண்டாம் கட்டத்தின் நிதிஏற்பாடான ரூபா 2,633,300 தொகை 2021 மார்ச் 31 ஆந் திகதி பெறப்பட்டிருந்தது. | நகர வாசிகளின் ஆர்ப்பாட்டத்தின் காரணமாக இடத்தை மாற்றவேண்டி ஏற்பட்டதை அறியத்தருகின்றோம். | நிதியுதவி வழங்குகின்ற நிறுவனங்களுக்கு சரியான தகவல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபைக்குச் சொந்தமான சந்தை, கடை போன்ற ஆதனங்கள் 2020 ஆம் ஆண்டிற்காக வாடகைக்கு வழங்கும் போது அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக செயற்பட்டமையினால் போட்டியாளர் நிலைமையொன்றின் மூலம் அதிக விலையை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் சபையினால் இழக்கப்பட்டிருந்தது. சபையின் 06 சொத்துக்களும் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் காசுக்கே வழங்கியமையால் 2019 ஆம் ஆண்டின் விலையில் 10 சதவீதம் அதிகரித்தேனும் வழங்காமையின் காரணமாக சபைக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 3,119,781 ஆகும். மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 228 மற்றும் 229 ஆம் பிரிவுகளுக்கு முரணாக முன்னைய ஆண்டின் வாடகைத் தொகையில் ஏதாவது சதவீதமொன்றை அதிகரித்து முன்னைய ஆண்டின் வாடகையாளருக்கு சட்டரீதியற்ற வகையில் வழங்கப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டமையால் சட்டரீதியான ஏற்பாட்டின் அடிப்படையில் ஆதனங்களை வாடகைக்கு வழங்கி அதனை முறைமைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு உள்ளூராட்சி ஆணையாளரின் 2019 யூலை 20 ஆந் திகதிய LGD/06/05/M05/2019 ஆம் இலக்க கடிதத்தில் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. | சபைத் தீர்மானத்தின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்தது என அறியத்தருகின்றோம். | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | புதிய பேருந்து நிலைய கடைத்தொகுதியில் 2 ஆவது மாடியில் திறந்த மண்டபம் தனியார் நிறுவனத்தால் 2018 | சினிமா மண்டபத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்து உரிய வருமானத்தை | அரசாங்கத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் வாடகைக்கு |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 10 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் 2019 பெப்ரவரி 27 ஆந் திகதி முதல் 25 வருட காலத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக விடயப்பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. 2007 ஆம் ஆண்டின் போது கேள்வி கோரும் போது காண்பிக்கப்பட்ட ரூபா 8,988,060 ஆகக்குறைந்த விலையில் 2019 பெப்ரவரி 07 ஆந் திகதி சபைத் தீர்மானத்தின் படி அரசாங்கத்தின் மதிப்பீடு இன்றி வழங்கப்பட்டமையால் சபைக்கு நட்டமொன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. மண்டபத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளாமையினால் உத்தேசிக்கப்பட்ட சினிமா மண்டபத்தின் வேலைகளை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்ததுடன் 2021 பெப்ரவரி 15 ஆந் திகதி வரையிலும் சபைக்கு பெற்றுக்கொள்வதற்கு இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | வழங்கி சபை வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | தெபேறும்வத்த காணி 2014 ஆம் ஆண்டு முதல் துணி விற்பனை செய்யும் நிறுவனத்தின் வாகன தரிப்பிடத்திற்காக 2017 ஒக்தோபர் 23 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின்படி 02 வருடங்களுக்காக வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அறவிட வேண்டிய மாதாந்த வாடகை ரூபா 220,000 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. 2017 நவம்பர் 25 ஆந் திகதி முதல் மாதாந்த வாடகை ரூபா 150,000 ஆக அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் 02 வருடங்களுக்கு மாத்திரம் அமுல்படும் மதிப்பீடாக இருந்தமையால் 2019 முதல் | அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் வரை தற்காலிக அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | அரசாங்கத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து சபை வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

கேள்வி நடைமுறைகள் பின்பற்றி மீண்டும் மதிப்பீடொன்றை செய்து வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிறுவனத்தால் அந்த வாகன தரிப்பிடத்தை பயன்படுத்தாத காலத்திற்காக சபையின் ஊழியர் ஒருவரை ஈடுபடுத்தி வருமானத்தை பெற்றுக்கொள்வதற்குள்ள இயலுமை தொடர்பாக சபையினால் கண்டறியப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (உ) | ஏத்துகால கடற்கரைப் பூங்காவின் வாகன தரிப்பிடக் கட்டணம் அறவிடல் தொடர்பான பிணைமுறி 2003 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை கேள்வி கோரப்பட்டிருந்த போதும் அதிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை முன்னைய வாடகை தொகையில் 10-20 சதவீதம் வரையிலான வீதமொன்றை அதிகரித்து ஆரம்பம் முதல் இதுவரை ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டில் வாடகைத் தொகை ரூபா 2,244,000 ஆக இருந்ததுடன் 2020 ஆம் ஆண்டிற்காக கடந்த ஆண்டின் வாடகைத் தொகையில் முன்னைய வாடகையாளருக்கு வழங்குவதற்கு 2019 ஒக்தோபர் 05 ஆந் திகதி சபை தீர்மானம் எடுத்திருந்தது. உள்ளூராட்சி ஆணையாளரின் 2019 யூலை 24 ஆந் திகதிய LGD/06/05/MOS/2019 ஆம் இலக்க கடிதத்தின் படி சபை ஆதனங்களை வாடகைக்கு வழங்கும் நடைமுறையை முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் இதற்காக மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 229 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் | சபைத் தீர்மானத்தின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. (சபைத் தீர்மானத்தை பெற்றுக் கொள்வதற்கு முன்னர் இந்த வாகன தரிப்பிடம் ரூபா 30 இலட்சத்துக்கு வாடகைக்கு வழங்குவதற்கு விருப்பம் கோரப்பட்டிருந்ததுடன் அந்த தொகையினை விட ரூபா 756,000 குறைந்த தொகையில் வழங்கப்பட்டமையால் அந்த பெறுமானத்தால் சபைக்கு நட்டமொன்று ஏற்பட்டிருந்தது)

**3.5 பெறுகைகள்**

**3.5.1 பொருட்கள் மற்றும் சேவைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 ஆம் ஆண்டிற்காக மாநகர உறுப்பினர்கள் மூலம் பாடசாலை பிள்ளைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு தேவையான அப்பியாச புத்தகங்களை கொள்வனவு செய்வதற்காக 2019 ஆம் ஆண்டில் ரூபா 17,954,896 தொகையும், 2020 ஆம் ஆண்டில் ரூபா 360,249 தொகையும் செலவிடப்பட்டிருந்த போதிலும் மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 7,616,901 ஆனமையால் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.2.2 ஆம் பிரிவிற்கு முரணாக கேள்வி முறைமையொன்றுக்கு புறம்பாக வழங்குனர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் சபைக்கு பெறக்கூடியதாக இருந்த நலன்கள் இழக்கப்பட்டிருந்தது. கட்டளையிடப்பட்டு 14 நாட்களுக்குள் அதாவது 2020 சனவரி 17 ஆந் திகதி வரையில் கட்டளையிடப்பட்ட புத்தகங்கள் அவ்வவ்போது கிடைத்திருந்ததுடன் 14 வகைகளில் 12950 புத்தகங்கள் 2021 சனவரி முடிவடையும் வரையிலும் கிடைத்திருக்கவில்லை. மேலும் மாநகர உறுப்பினர்கள் 05 பேர்களினால் பகிர்ந்தளித்தல் ஆவணங்கள் 2021 சனவரி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | ஆவணங்கள் கையளிக்காத மாநகர உறுப்பினர்களுக்கு கடிதம் அனுப்பப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கொச்சிக்கடை கழிவுப் பொருள் தளத்திற்கு 2020 ஆம் ஆண்டிற்காக கிரவல் வழங்குவதற்காக ரூபா 2,623,600 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கிரவல் வழங்கலுக்காக 2020 ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரம் பெற்ற வழங்குனர் ஒருவர் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அவரிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படாமல் 2019 ஆம் ஆண்டில் கிரவல் வழங்கிய நிறுவனம் 2019 நவம்பர் 21 ஆந் திகதி அனுப்பப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் 2020 ஆம் ஆண்டிற்காக அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 1.2.1 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக அந்த நிறுவனத்திலிருந்து 2020 யூன் 17 மற்றும் 2020 ஆகஸ்ட் 26 ஆந் திகதிகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த நிறுவனம் 2020 ஆம் ஆண்டில் கிரவல் வழங்குவதற்காக அனுமதிப்பத்திரமொன்றை பெறப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. இதற்கான உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 03 இன் பிரகாரம் ஒவ்வொரு மாதமும் 200 கிரவல் கியூப் உச்ச அளவின் கீழ் வழங்க வேண்டியிருந்த போதிலும் 2019 திசெம்பர் 23 ஆந் திகதி முதல் 2020 மார்ச் 04 ஆந் திகதி வரை மாத்திரம் கிரவல் வழங்கப்பட்டிருந்ததுடன் அத்திகதியிலிருந்து 2021 பெப்ரவரி 10 ஆந் திகதி வரையிலும் கிரவல் வழங்கப்பட்டிருக்கவில்லை.<br>பொதுமக்கள் அடக்குமுறை சட்டத்தின் கீழ் நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கிற்கு 2017 யூன் 05 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த தீர்மானத்தின் பிரகாரம் கழிவுப்பொருட்களை மூடுதல் தினந்தோறும் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், வழக்கு தீர்ப்பு சபையினால் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2020 பெப்ரவரி 14 ஆந் திகதி கழிவுப்பொருள் மலைக்கு கொண்டு செல்லப்பட்ட கிரவல் நியமமின்றி கல் கலவை தூசான மண்ணாக இருந்ததுடன் எடுக்கப்பட்ட சகல மண்ணும் நியமங்கள் இன்றி இருந்த போதிலும் 05 மண் கியூப்களுக்கு மாத்திரம் குறைத்து கொடுப்பனவு | முன்னைய ஆண்டின் விலையில் உடன்படிக்கை செய்யப்பட்டமையால் வருடாந்தம் ஏற்படுகின்ற விலை அதிகரிப்பு மற்றும் பெறுகைகளில் ஏற்படுகின்ற கிரயத்தை எடுக்கும் போது நட்டமொன்று ஏற்படவில்லை என அறியத்தருகின்றோம். | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தது. கிரவல் இன்றி மட்டப்படுத்தப்பட்ட கழிவுகள் அநேகமாக காணப்பட்டமையால் அதில் துர்நாற்றம் வீசக்கூடியதாக இருந்தமையால் பொதுமக்களின் எதிர்ப்பு ஏற்படுவதற்கு முடியுமாக இருந்தமையும் நுளம்புகள் பெருகுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளமையும் பிரதான சுகாதார பரிசோதகரினால் 2019 திசெம்பர் 19 ஆந் திகதி எழுத்துமூலம் அறிக்கையிடப்பட்டிருந்தது. | | |
| (இ) | கழிவுகளை கூறுகளாக்குவதற்காக D4E இயந்திரத்தின் சேவையை பெற்றுக்கொள்வற்காக 2020 சனவரி 01 ஆந் திகதி முதல் ஒரு வருட காலத்திற்கு தனியார் நிறுவனமொன்றுடன் 2020 சனவரி 01 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 4,165,680 தொகை 2020 சனவரி முதல் திசெம்பர் வரை மாதாந்தம் செலுத்தப்பட்டிருந்தது. கடந்த ஆண்டில் கேள்வி வழங்கப்பட்ட கேள்விதாரரிடமிருந்து 2019 நவம்பர் 21 ஆந் திகதிய கோரிக்கையின் அடிப்படையில் பெறுகைகள் நடைமுறைகளுக்கு புறம்பாக 2019 திசெம்பர் 05 ஆந் திகதி சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் அந்த நிறுவனத்திற்கே 2020 ஆம் ஆண்டிற்காகவும் கேள்வி வழங்கப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டின் விலையில் உடன்படிக்கை செய்யப்பட்டமையால் வருடாந்தம் ஏற்படுகின்ற விலை அதிகரிப்பு மற்றும் பெறுகைகளில் ஏற்படுகின்ற கிரயத்தை எடுக்கும் போது நட்டமொன்று ஏற்படவில்லை என அறியத்தருகின்றோம். | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | நீர்கொழும்பு பேருந்து நிலையம் மற்றும் அதற்கு அருகில் சுத்திகரிக்கும் செயற்பாடுகளுக்காக சேவை நிறுவனமொன்றை தெரிவு செய்யும் வகையில் 2019 ஒக்தோபர் 17 ஆந் திகதி கூறுவிலை கோரப்பட்டு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் ஆகக்குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனத்திற்கு மாதத்திற்கு ரூபா 541,566 தொகை செலுத்தி சேவையினை பெற்றுக்கொள்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 05 ஆந் திகதி நடைபெற்ற பொதுச்சபையினால் கடந்த காலத்தில் சேவை வழங்கிய 2 ஆவது ஆகக்குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனம் தொடர்பாக இதுவரை எந்தவொரு முறைப்பாடும் கிடைக்காதிருந்தமை, மாநகர அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற | கூறுவிலைகளின் மாற்றத்தைவிட சேவையின் தரத்தன்மை தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

நிறுவனமொன்றாக இருந்தமை மற்றும் அதிக அனுபவம் இந்த நிறுவனத்திற்கு இருந்தமை என்பவற்றை கவனத்தில் கொண்டு 02 ஆவது கேள்வி சமர்ப்பித்த நிறுவனம் அந்த சேவையை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

மேற்கூறப்பட்ட இரண்டாவது ஆகக்குறைந்த விலைக்கு கேள்வி கையளித்தமையால் சபைக்கு வருடாந்தம் ரூபா 151,608 நட்டமொன்று ஏற்படுகின்றமை இனங்காணப்பட்டிருந்தது.